கேட்டவுடனே, கும்பிட்ட கைகள் விலகும்முன்னரே வரம் கொடுத்த தாய்க்கும், அதைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

223—

பெண்கள் உயர்நிலைப் பள்ளி

***20593 டாக்டர் த. ஹரிதாஸ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, ஒலக்கூர் கிராமத்திலுள்ள இருபாலர் மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து பெண்களுக்குத் தனியாக உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தொகுதி, ஒலக்கூர் கிராமத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளி, இருபால் மாணாக்கர்கள் பயிலும் பள்ளியாகும். இப்பள்ளியில் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களை மட்டும் தனியாகப் பிரித்து, பெண்களுக்கென தனியாக ஓர் உயர் நிலைப் பள்ளி அமைக்க, பொது மக்கள் சார்பில் பங்குத் தொகை ரூபாய் ஒரு இலட்சம் அரசுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, தேவை மற்றும் அரசின் நிதிநிலையின் அடிப்படையில், வருங்காலத்தில் இப்பள்ளியைப் பிரித்து, பெண்களுக்குத் தனியாக உயர்நிலைப் பள்ளியை அமைக்க, மாண்புமிகு தமிழ்நாடு

2015 செப்டம்பர் 3]

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ் அவர்கள்.*

டாக்டர் த. ஹரிதாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்கு அதிபதியே! கண்ணால் காணும் சரஸ்வதியே! வள்ளல்களின் வடிவமே! வாழ வைக்கும் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) உண்டி கொடுக்கும் தாயே! மிதிவண்டி கொடுக்கும் கருணையே! ஓய்வறியா உழைப்பே! உலகம் போற்றும் தலைவியே! மாண்புமிகு புரட்சித் தலைவி முதல்வர் அம்மா அவர்களே!*

கல்விக்கு அதிபதி சரஸ்வதி என்பார்கள்; சரஸ்வதியை இதுவரை யாரும் நேரில் பார்த்ததில்லை. சரஸ்வதி யாருக்கும், எதையும் நேரடியாகக் கொடுத்ததில்லை. 'மதுரையில் மாணவ, மாணவிகளுக்கு சரஸ்வதி ஆயிரம் மடிக் கணினிகளை வழங்கினார்கள்; ஸ்ரீரங்கத்திலே சரஸ்வதி ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு நான்கு ஜோடி சீருடைகளை வழங்கினார்கள்; சென்னையிலே சரஸ்வதி இரண்டாயிரம் மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கினார்கள்' என்று எவரும் சொன்னதில்லை, எவரும் கேட்டதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள் வழங்குவதை மக்கள் நேரிலே பார்க்கிறார்கள்; தொலைக்காட்சிகளிலே பார்க்கிறார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) ஏடுகளிலும் பார்க்கிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களே, உங்களை மக்களும், மாணவச் செல்வங்களும், கண்ணால் காணும் சரஸ்வதியாகவே பார்க்கிறார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) மதிக்கிறார்கள்; துதிக்கிறார்கள்.

சங்க காலத்திலே, 'பிள்ளைகளைப் பெற்றெடுப்பது தாயின் கடமை; அவர்களைச் சான்றோர் ஆக்குவது தந்தையின் கடமை' என்பார்கள். ஆனால், இந்தக் காலத்திலும் பிள்ளைகளைப் பெற்றெடுப்பது தாயின் கடமைதான். ஆனால், அவர்கள் கற்பதற்கு எல்லாம் கொடுத்து சான்றோன் ஆக்குவது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்களின் கடமையாக இருக்கிறது.

(மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை தந்தைமார்களின் கடமைகளையும், தனித்த நிலையில் தானே ஏற்று, அதிலேயும் புரட்சி செய்யும் மாண்புமிகு அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் நூறாண்டு அல்ல; ஆயிரம் ஆண்டுகள் வாழ வேண்டும்.

என் தொகுதியைச் சார்ந்த ஓலக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கென தனியாக பள்ளி அமைக்க ஆணை வழங்கும்போது, தாய்மையின் சிகரமாக விளங்கும் உங்களை, என் உடம்பெல்லாம் வாயாக்கி வாழ்த்துகிறேன்; என் உயிர் இருக்கும்வரை, நெஞ்சாரப் போற்றிப் பூஜிக்கிறேன். வணங்குவேன்; வணங்குவேன்; வணங்கிக் கொண்டேயிருப்பேன். தங்களின் பாத மலர்களுக்குக் கோடானுகோடி நன்றி, நன்றி, நன்றி அம்மா! வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஒன்றியம், புதுமடத்திலுள்ள அரசினர் இருபாலர் மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, பெண்களுக்கென தனியாக பள்ளி அமைக்கப்பட வேண்டுமென்பது நீண்ட காலக் கோரிக்கையாக இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மண்டபம் ஒன்றியம், புதுமடம் பகுதியில் அமைந்துள்ள மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து பெண்களுக்கென்று தனியாக ஒரு பள்ளியை அமைப்பதற்குக் கோரிக்கை விடுத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நான்கு ஆண்டு ஆட்சிக் காலத்திலே, 810 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய புதுமடம் மேல்நிலைப் பள்ளியிலே, அரசினுடைய சட்ட திட்டங்களுக்குத் தகுந்தாற்போல், அரசு வழங்கியிருக்கிற நெறிமுறைகளையெல்லாம் அவர்கள் பூர்த்தி*

2015 செப்டம்பர் 3]

செய்யும்பட்சத்தில், அங்கேயுள்ள மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து, பெண்களுக்கென்று தனியாக ஒரு பள்ளியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான ஆலோசனையைப் பெற்று வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். செங்கல்பட்டு தொகுதியில், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த சிங்கப்பெருமாள்கோவில் ஊராட்சியில் அரசு இருபாலர் மேல்நிலைப் பள்ளி அமைந்துள்ளது. அந்தப் பள்ளியை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி என தனித்தனியாகப் பிரித்திட முன்வருவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், சிங்கப்பெருமாள்கோவில் ஊராட்சியில் அமைந்துள்ள மேல்நிலைப் பள்ளியை பெண்களுக்கென தனியாகப் பிரித்துத் தருவதற்குத் தேவையான நெறிமுறைகளையெல்லாம் அந்தப் பள்ளி நிருவாகம் பூர்த்தி செய்யும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலை ஆதாரத்தைப் பொறுத்து, தர வரிசை அடிப்படையில் அந்தப் பள்ளியைப் பிரித்துக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 224, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு*